Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 191/2023**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியப்பன் | ஜாதி | : | |
| த/பெ | : | சிக்கன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | பெருமாள்கோவில்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 31/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.11.2025.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, பெருமாள்கோவில்பட்டியில் குடியிருந்து பந்தல் போடும் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 12.02.2021 ஆம் தேதி நான், கருப்பையா, முருகேசன் ஆகிய மூவரும் பந்தல் போடுவதற்காக என்னுடைய TN 57 7242 பதிவெண் கொண்ட Splender இருசக்கர வாகனத்தில் சென்றோம். கூரை இல்லை என்பதால் செம்பட்டி சென்று பார்த்துவிட்டு, நாங்கள் பெருமாள்கோவில்பட்டிக்கு சென்றுகொண்டிருந்தபோது பச்சமலையான்கோட்டை ரோட்டில், காலை 08.30 மணி சுமாருக்கு பச்சமலையான்கோட்டைக்கும், நடுப்பட்டிக்கும் நடுவில் நடுப்பட்டி பக்கம் இருந்து வந்த TATA Ace வாகனம் வேகமாக வந்து எங்கள் மீது மோதிவிட்டது. எனக்கு வலது கால், வலது கண் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டுவிட்டது. கருப்பையாவிற்கு கால் உடைந்துவிட்டது. முருகேசனுக்கு லேசான அடிபட்டுவிட்டது. பிறகு 108 ஆம்புலன்சில் என்னை JCB மருத்துவமனைக்கும், மற்றவர்களை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிக்சையில் சேர்த்தார்கள். நான் மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் வந்து விசாரணை் செய்து வாக்குமூலம் வாங்கினார்கள். தற்பொழுது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுயைது தான். அந்த புகார்

வாக்குடுமுலம் (அ.சா.ஆ-1/PW.1 ) ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த TATA Ace வாகனத்தை ஓட்டிவந்தவரை என்னால் அடையாளம் காட்ட முடியும்.

எதிரி ஆஜர் இல்லை. எதிரியை அடையாளம் காட்டும் பொருட்டு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக இவ்வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor